ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1832/31 - 2013 ඔක්තෝබර් 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.10.17
*1832/31 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில், மானிப்பாய் (ஜே/140) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை மா அதிபரினால் தயாரிக்கப்பட்ட 2012.02.26 ஆந் திகதிய யா/எஸ்என்டீ/2012/06 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட சுமார் 0.2988 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய சூடுவெந்தபுலம் என்னும் பெயருடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் :

**துண்டு இல. 1 - சூடுவெந்தபுலம் - விஸ்தீரணம் : சுமார் 0.2988 ஹெக்டயார்**

வடக்கு : ரீ. நாகலிங்கம், மண்டலேஸ்வரனின் மனைவி கமலா ஆகியோர் உரிமை கோரும் சூடுவெந்தபுலம் காணி ; கிழக்கு : வீதி, எஸ். சிவகுருநாதன், என். மீனாம்பிகை ஆகியோர் உரிமை கோரும் சூடுவெந்தபுலம் காணி ; தெற்கு : எஸ். சிவகுருநாதன், என். மீனாம்பிகை, பீ. நடராஜா, மகாலிங்கத்தின் மனைவி மனோன்மணி ஆகியோர் உரிமை கோரும் சூடுவெந்தபுலம் காணி ; மேற்கு : மகாலிங்கத்தின் மனைவி மனோன்மணி, மண்டலேஸ்வரனின் மனைவி கமலா ஆகியோர் உரிமை கோரும் சூடுவெந்தபுலம் காணி.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4/3/9/2011/டப்எஸ்/212.
பிர. செ. இல. : வீஎஸ்டப்/டீஎஸ்/எல்ஏஎன்டீ/டப்எஸ்/2011.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
'மிஹிகத மெதுர',
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.09.30.

*11 - 116*